பக்கங்கள் நான்கு — விலை ரூபா 4-50

# பிரசாலை

முரசு 05 ஒலி 91 பிரமோதூத மாசி 14
1991 பெப்ருவரி 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

## இந்தியக் கடற்படை திருமலைக்கு?
## கொழும்பிலுள்ள தூதுவர் ஜா கருத்து

இந்தியகடற்படை திருகோணமலையை ஒரு தளமாக உபயோகிப்பது பற்றி எதுவும் சொல்வதற்கு இல்லை என கொழும்பிலுள்ள இந்தியத்தூதுவர் என். என். ஜா தெரிவித்துள்ளார். வேறு ஒரு கடற்படை இங்கு வருவதை இந்தியா விரும்பவில்லை எனக் குறிப்பிட்ட அவர் இந்தியக் கடற்படை திருமலைக்கு வருவது இரு நாடுகளினதும் எதிர்காலத்திட்டங்களைப் பொறுத்ததே எனவும் சொன்னார் இலங்கை இராணுவ அதிகாரிகள் எழுநூறு பேருக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இலங்கை இந்தியாவிடம் ஆயுத உதவிகளைக் கேட்கவில்லை. ஆனால் மாருதி ஜீப்களையும், ட்ரக்

...04ஆம் பக்கம் பார்க்க

# உலக வங்கி நிதி உதவி
# இவ்வாண்டு குறையும்

## 'நிதி ஆயுதக் கொள்வனவுக்கு பயன்படுவது காரணம்?

கடந்த இரண்டு வருடமாக இலங்கையின் அபிவிருத்தித்திட்டத்துக்கெனத் தான் வழங்கி வந்த நிதியுதவியை இவ்வாண்டு குறைக்கப் போவதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

நிதியுதவிகள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யப் பயன்படுத்தப்படுவதாலேயே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிகிறது.

பாரிஸில் நடைபெற்ற உலக வங்கி மாநாட்டில் இம்முடிவு எடுக்கப்பட்டதாக தெரியவருகிறது.

இம்மாதம் 7 ஆம் திகதி நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இலங்கைப் பிரதிநிதி பாஸ்கரலிங்கத்தை அந்நாட்டுப் பிரதிநிதிகள் வடக்கு கிழக்கில் ஏற்படும் அழிவுகள் குறித்து துருவித்துருவி கேள்விகள் தொடுத்ததும் குறிப்பிடத்தக்கது. (ப. 11)

## ஏறாவூர் பஸ் பயணிகள் கொலை 'டெயிலி நியூஸ்' செய்தி திரிப்பு

ஏறாவூரில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற பஸ் பயணிகள் கொலைச்சம்பவம், இரு ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டதற்கு கிராமவாசிகள் ஆத்திரப்பட்டு செய்ததாக 22-ம் திகதி 'டெயிலி நியூஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால் அதேதினம் வெளியான 'ஐலண்ட்டில்' முஸ்லிம் ஊர்காவற்படையினர் கட்டவிழ்த்து விடப்பட்டு தமிழ் மக்களைக் கொன்றதாகதெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## கொழும்பு பத்திரிகைகளிடையே கருத்து மோதல் ஆரம்பம்

'ஐலண்ட்' பத்திரிகை திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் சகோதரர் உபாலி குறூப்பின் வெளியீடு என 21 ஆம் திகதி 'டெயிலி நியூஸ்' பத்திரிகை ஆசிரிய தலையங்கம் எழுதியுள்ளது.

இதற்கு மறுப்புத் தெரிவித்து 'ஐலண்ட்' பத்திரிகை மறுநாள் முன்பக்கத்தில் பெட்டி கட்டி பின்வருமாறு எழுதியுள்ளது.

'நாம் எந்த ஒரு அரசியல்வாதிகளையோ அரசியல் கட்சியையோ ஆதரிக்கவில்லை நாம் ஒரு சுதந்திர பத்திரிகை நிறுவனம் என குறிப்பிட்டுள்ளது. (33)

## சரசாலை மட்டுவிலில் வர்த்தகர்களுக்கு அபராதம்

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த இ. சிவயோகநாதன் என்ற வர்த்தகர் கால் போத்தல் தேங்காயெண்ணெய் 20 ரூபாவாக விற்றதை சாவகச்சேரி வர்த்தகர் சங்க கண்காணிப்புக் குழு கண்டுபிடித்து 2000 ரூபா அபராதம் விதித்துள்ளது.

இதே போலசரசாலையைச் சேர்ந்த வர்த்தகரான மகேஸ்வரன் என்பவர் ஒரு றாத்தல் பாண் 9-50 சதமாகவும் ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய் 32 ரூபாவாகவும் விற்றதையும் கண்டு பிடித்து ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது. (ப5)

## கிழக்கில் அகதிகள் மீளக்குடியமர மறுப்புத் தெரிவிக்கின்றனர்

கிழக்கு மாகாணத்தில் திருக்கோவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதிமுகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ள அகதிகளை மீண்டும் குடியமர்த்த எடுத்த நடவடிக்கைக்கு அகதிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

காரைதீவு, சம்மாந்துறை, சவளக்கடை, வீரமுனை ஆகிய பகுதி மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இராணுவ முகாமுக்கு அருகில் பேசாலை அகதிகள் முகாம்

பேசாலை இராணுவ முகாமிற்கு அருகிலுள்ள அகதி முகாம் பல்வேறு நெருக்கடியின் மத்தியிலும் செயற்பட்டு வருகிறதாகத் தெரிய வருகிறது.

இந்த இராணுவ முகாமை பேசாலையிலிருந்து அகற்றும்படி ஐக்கிய நாடுகள் அகதிகள்

—04 ஆம் பக்கம் பார்க்க

## பரீட்சைகள் பற்றிய வதந்திகளை மாணவர் நம்பவேண்டாம்-பணிப்பாளர்

க. பொ. த உயர்தர சாதாரண தரப் பரீட்சைகள் மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை நடாத்துவது தொடர்பான வீண் வதந்திகளையும், ஊகங்களையும் பொருட்படுத்த வேண்டாம் என யாழ் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இப் பரீட்சைகளை நடாத்த கல்வித் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இப் பரீட்சைகளுடன் இவ்வாண்டு இறுதியில் 9-ம்

...04 ஆம் பக்கம் பார்க்க

## ஆங்கில ஆசிரியர்களை நியமிக்க அரசு நடவடிக்கை

நாட்டில் உள்ளபாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு அரசு புதிய ஆசிரியர்களை நியமிக்கவுள்ளது.

இரு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு நேரடியாக நியமனம் வழங்க கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது.(74

## மட்டக்களப்புச் சுற்றிவளைப்பு 411 தமிழர் இராணுவத்தால் கைது

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கதிரவெளி எனும் இடத்தில் வைத்து கடந்த செவ்வாயன்று காலை 11 மணியளவில் 11 ஆண்களை கைது செய்து இராணுவத்தினர் இவர்களை முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

இவர்களில் 7 பேர் குடும்பத்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் வாகரை கதிரவெளி, மாங்கேணி ஆகிய பகுதிகளில் இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ளனர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## கொண்டச்சி இழப்புப் பற்றி பாதுகாப்பு அமைச்சு விசாரணை

மன்னார் கொண்டச்சியில் 50 படையினர் பலியானது குறித்து பாதுகாப்பு அமைச்சு விசாரணை நடாத்தவுள்ளது

இராணுவத்தின் ஒரு பிரிவு ஏற்கனவே பதுங்கியிருந்து விட்டுத் திரும்பி வருகையில் புலிகளால் தாக்கப்பட்டதாகவும்,இவர்களுக்கு உதவிக்கு வந்த 2வது படைப்பிரிவும் இவ்வாறு தாக்கப்பட்டதாகவும் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்தார்.

## பேசாலையில் கடும் மோதல் இரு சிப்பாய்கள் பலி

மன்னார்த் தீவு பேசாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடும் மோதல் இடம் பெற்றதாக மன்னார் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம் மோதலில் இராணுவத்தினரின் தரப்பில் இருவர் கொல்லப்பட்டதாகவும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன. (70)

## அமெரிக்க வைத்திய உபகரணங்கள் எடுத்துவர ஏற்பாடு

யாழ் போதனா வைத்தியசாலைக்கும், கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கும் அமெரிக்க நிறுவனம் ஒன்று வழங்கிய உபகரணங்கள் இங்கு கொண்டுவர ஏற்பாடாகியுள்ளது.

விரைவில் இவை இங்கு எடுத்துவரப்படவுள்ளன.

## யாழ்ப்பாண வாசிகள் 13 பேர் மன்னாரில் படுகொலை

மன்னாருக்குச் சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 13 பேர் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டு சடலங்கள் கிணற்றில் போடப்பட்டு மூடப்பட்டதாக நேற்று அங்கிருந்து வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

தள்ளாடி முகாமுக்கு அருகில் உள்ள முள்ளிப்பள்ளம் என்ற இடத்தில் இச்சம்பவம்

—04 ஆம் பக்கம் பார்க்க

## பாணந்துறை மக்கள் வங்கி முன் 10 லட்சம் ரூபா கொள்ளை

பாணந்துறை மக்கள் வங்கிக்கிளையில் வைப்பிலிடக் கொண்டு வரப்பட்ட 10 லட்சம்ரூபா பணம் வங்கிமுன்பாக ஆயுதம் தாங்கிய இளைஞர் ஒருவரால் கொள்ளையடிக்கப்பட்டது.

பாணந்துறை கூட்டுறவுச் சங்க ஊழியர் இப்பணத்

—04 ஆம் பக்கம் பார்க்க

## மகிழடித்தீவில் மோதல் 3 புலிகள் வீரமரணம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்முனைக்கும், மகிழடித்தீவிற்கும் இடையில் வைத்து இராணுவத்தினருக்கும், புலிகளுக்கும் இடையே நடந்த மோதலில் புலிகள் தரப்பில்நேசன்(ஆரையம்பதி) கண்ணதாசன் (மகிழடித்தீவு) நிக்சன் ஆகியோர் வீர மரணத்தைத் தழுவிக் கொண்டனர். இராணுவத்தினர் தரப்பில் இரு சிப்பாய்கள் பலியானார்கள். (71)

## ஒய்வூதியர் சங்க அமைப்புக் கூட்டம்

'யாழ் அரசாங்க ஒய்வூதியம் பெறுவோர் சங்கம்' என்னும் அமைப்பொன்று புதிதாக அமைக்கப்படவுள்ளது.

ஒய்வூதியம் பெறுவோருக்கு மரணப் பணிக்கொடை. விசேட காப்புறுதித் திட்டம் என்பவற்றை அறிமுகப்படுத்தி செயற்படுத்த இச்சங்கம் நடவடிக்கையெடுக்கவுள்ளதாக அதன் அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

யாழ் அரசாங்க ஒய்வூதியம் பெறுவோர் சங்க அமைப்புக் கூட்டம் யாழ் பிரதான வீதியிலுள்ள சென் ஜேம்ஸ் ஆலய மண்டபத்தில் இரண்டாம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறுமெனவும் சகல இளைப்பாறிய உத்தியோகத்தர்களையும் இச்சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நிவாரணம் வழங்க ஒருகோடி ரூபா நிதி

யாழ் மாவட்டத்தில் வன்செயலினால் உயிரிழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கவென மேலும் ஒருகோடி ரூபா வழங்கப்பட்டுள்ளதாகக் கொழும்பில் புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

# செய்திக் கொத்து

## ஹெலித் தாக்குதலில் குடும்பஸ்தர் பலி!

பூமியில் பிறக்கும்போதே தாயை இழந்த நிரோசன், நிரோசினி என்ற இரட்டைக் குழந்தைகள் 5 மாதங்களின் பின் 'ஹெலியின்' துப்பாக்கி வேட்டுக்களால் தந்தையையும் இழந்த பரிதாப சம்பவம் ஒன்று மானிப்பாயில் நடந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை நுணாவிலில் பயணிகள் பஸ் மீது ஹெலி ஒன்று மேற்கொண்ட தாக்குதலில் பலியான பூ. விஜயகுமார் என்பவரே துரதிர்ஷ்டசாலிகளான இவ்விரட்டை குழந்தைகளின் தந்தையாவார் (ப10)

## மதஸ்தாபனங்களுக்கு எண்ணெய் வழங்கப்பட்டது

தென்மராட்சியைச் சேர்ந்த 53 மதஸ்தாபனங்களுக்கு சாவகச்சேரி வர்த்தகர் சங்கத்தினால் நியாயவிலையில் தலா ஐந்து லீற்றர் தேங்காய் எண்ணெய் வழங்கப்பட்டது. (ப-5)

## முத்தமிழ் விழா ஏற்பாடுகள்

விடுதலைப்புலிகள் கலை, கலாசாரப்பிரிவினர் நடாத்தும் முத்தமிழ் விழாபற்றி 25 2. 91 முரசொலியில் 'வரலாறு காணாத முத்தமிழ் விழா...... புதுவை இரத்தினதுரை ஏற்பாடு' என்று தலைப்பிடப்பட்டுள்ளது தவறு விழாவுக்கான ஏற்பாடுகள் பிரிவு ரீதியான கூட்டு முயற்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை வாசக நேயர்களின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

## வார்ட்டுகளுக்கு மின்விநியோகம் தடை

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் நோயாளர்கள் தங்கியிருந்து வைத்தியம் பெறும் "வார்ட்"களுக்கு நாளொன்றுக்கு ஒருமணி நேரம் விநியோகிக்கப்பட்டு வந்த ஜெனறேற்றர் மின்சாரம் கடந்த 22ஆம் திகதி தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளது.

"வார்ட்"டுக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வந்த மின்சாரம் நிறுத்தப்பட்டமையினால் குளிரூட்டிப்பெட்டிகளில் வைக்கப்படும் அத்தியாவசிய மருந்துவகைகள் பழுதடையும் அவலநிலையும் வார்ட்டுக்களில் தொற்று நீக்கி நடவடிக்கைகள் பாதிப்படையும் நிலையும் ஏற்பட்டுள்ளதாம். (15)

## நிதி ஒதுக்கீட்டைப் பெற முயற்சி

கடந்த கால அசம்பாவிதங்களினால் மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற இழப்பு, சேதங்கள் நிரப்பீடு செய்யுமுகமாக இவ்வருடத்திற்குரிய நிதி ஒதுக்கீட்டை அரசிடமிருந்து பெற நடவடிக்கை எடுத்துவருவதாக மன்னார் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இதுவரை வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கும் உலர் உணவுப் பொருள்களைவழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் கொடுப்பனவுகள் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அரசாங்க அதிபர் உறுதியளித்துள்ளார்,

## இயக்குநர் சபைகள் புனரமைப்பு

மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினதும் இயக்குநர் சபைகளைமீண்டும் புனரமைத்து அவற்றினை ஒழுங்காக இயங்கச் செய்ய அடம்பன் கூட்டுறவு உதவி ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அரசாங்கம் வழங்கும் உணவுப் பொருள்களை மக்களுக்கு வழங்குவது மட்டும் சேவை எனக் கருதாமல் தமது பணத்தைக் கொண்டு பொருள்களைக் கொள்வனவு செய்து மக்களுக்கு விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (71)

## பாராளுமன்றத்தில் ரௌடித்தனம் அடிதடிசம்பவம் பற்றி ரஞ்சன் வர்ணனை

"பாராளுமன்றத்தில் ரௌடித்தனம்" என்று பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சரும், ராஜாங்க அமைச்சருமான ரஞ்சன் விஜேரட்ன பாராளுமன்றத்தில் நிகழ்ந்த அடிதடிச் சம்பவம் பற்றி வர்ணித்தார்.

"பாராளுமன்றத்தில் ரௌடித்தனம் ஆட்சி செய்ய அனுமதிக்க முடியாது. ரௌடிகளைப் பாதுகாக்க நாம் வரவில்லை." என்றும் அவர் குறிப்பிட்டார். (33)

## பொலிஸ் காவலில் இருந்த தமிழர் கொலை! சக சிங்களக் கைதி தாக்கியதாகத் தகவல்!!

கொழும்பில் கொருவலைப் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழர் ஒருவர் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இதே பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரே இவரைத் தாக்கிக் கொலைசெய்ததாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ( 33


## நேர்முகப் பரீட்சை

20-02-91 இல் நடைபெற இருந்து ஒத்திவைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை 27-2-91 புதன் காலை 10.00 மணியளவில் சமாச காரியாலயத்தில் நடைபெறும். 20-2-91 இல் நேர்முகப் பரீட்சைக்கு கடிதங்கள் இடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகள் மட்டும் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்கும் வண்ணம் வேண்டுகின்றேன்.

பொதுமுகாமையாளர்
சங்கானை வடிசாலை,
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

02126



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

முல்லைத்தீவு மாவட்டத் தளபதி

### மேஜர் காந்தன்

வீரசிங்கம் திலீப்குமார்
(திரியாய் — திருமலை)

வீரஜனனம் 06 — 08 — 1971
வீரமரணம் 27 — 01 — 1991

"தாய்ப்பாசம் மறந்து தலைவனின் ஆணைகேட்டு
தாய்நாட்டு மண்மீட்கப்புறப்பட்ட வீரப்புலியே
காந்தா நீ கையில் ஆயுதமும் கழுத்தில் நஞ்சும்
நெஞ்சில் உறுதியும் நேர்மைத் திறனும் கொண்டு
பதினநான்கு வயதில் பள்ளிப் படிப்பதை
பாதியில் நிறுத்தி உன் பணி தொடங்கினாய்
வீரப்புலியாய் வீறு கொண்டெழுந்தாய்
களம் பல கண்டாய் கயவர் கூட்டத்தை அழித்தாய்
முல்லை மாவட்டத் தளபதியாகி முன்னின்றுழைத்தாய்
மணலாறில் எதிரியின் முகாமழிக்கச் சென்றாய்
எதிரியின் குண்டேறியது உன்மார்பில்
மரணிக்கவில்லை நீ விதையாய் விதைக்கப்பட்டாய்
உன்பாதையில் நாம் உறுதியுடன் பணிதொடர்வோம்"

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

அம்மா, அண்ணாமார், அக்காமார்,
தம்பி, தங்கை, மருமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்

புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

02131



உ

தெல்லிப்பழை

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## மாசிமகப் பெருவிழா

### 28 - 02 - 91 வியாழக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை | 6 00 மணி:- | துர்க்கா புஷ்கரணித் தீர்த்தத் தடாகத்தில் மாசிமகத் தீர்த்த உற்சவம். |
| ,, | 6-30 ,, | ஏகாசீதி கலசஸ்நபன கும்பபூசை (81 கலசம் வைத்து ஸ்நபனம்) |
| ,, | 7-30 ,, | திரவியாபிஷேகம் |
| ,, | 8-30 ,, | கலசாபிஷேகம் |
| மு. பகல் | 9-00 மணி:- | காலை சந்தி |
| ,, | 9-30 ,, | ஸ்வர்ண பத்ம புஷ்பார்ச்சனை |
| ,, | 10-30 ,, | திருவீதியுலா |
| ,, | 11-30 ,, | ஆசார்ய சம்பாவனை (18-02-91 — 27-02-91 வரை நடை பெற்ற இலட்சார்ச்சனையில் பங்கேற்ற சிவாசாரியார்களையும் அந்தணப் பெருமக்களையும் பணியாளர்களையும் கௌரவித்தல்) |
| நண்பகல் | 12-00 மணி:- | உச்சிக்காலம் |
| ,, | 12 30 ,, | அன்னதானம் |
| மாலை | 3-30 ,, | ஸ்ரீசக்கரப் பூசையும் பூரணைத் திருவிழாவும். |

நிர்வாகசபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
தெல்லிப்பழை.

02128



## தாதிப் பயிற்சி நெறி

## Diploma in Nursing

விண்ணப்பத் திகதி 10. 03. 91 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

1. 1½ வருட காலப் பயிற்சி நெறி.
2. சர்வதேசத் தகைமையுடைய சான்றிதழ்
3. அரசினர் வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சிகள்.
4. அரச தொழில் வாய்ப்புக்கு ஏற்புடையது.

விபரங்கட்கு:-

அதிபர்

### சாயி மெடிக்கல் அக்கடமி

இல- 6, பருத்தித்துறைவீதி,
(மக் ரவல்ஸ் அருகில், முதலாம் ஒழுங்கை)
யாழ்நகர்.

02132

# அத்தியாவசிய உணவுப் பொருள்களைத் தருவிக்க தொண்டர் ஸ்தாபனங்களுக்குக் கொழும்பில் தடை

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கு லொறி மூலம் உணவுப் பொருள்களை எடுத்து வரச் சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்கள் எடுத்த முயற்சிகள் கூட்டுப்படைத் தலைமையகத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தொண்டர் ஸ்தாபனங்கள் தெரிவித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியா மற்றும் யாழ் மாவட்டத்தின் ஒருசில இடங்களில் பாதுகாப்புப் படையினர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும், எனவே தான் இத்தடை விதிக்கப்படுவதாகவும் கூட்டுப்படைத் தலைமையலுவலகம் இதற்குக் காரணம் காட்டியுள்ளதாக அத் தொண்டர் ஸ்தாபனங்கள் தெரிவித்துள்ளன. (16)

## கிளிநொச்சி பயிலுநர் ஆசிரியர்களுக்கு 3 வருட தொலைக்கல்விப் பயிற்சிநெறி

கிளிநொச்சி கல்வி மாவட்டத்தில் கடமை புரியும் பயிலுநர் ஆசிரியர்களுக்கான மூன்று வருடதொலைக்கல்விப்பயிற்சி நெறி மார்ச் மாதம் ஆரம்பமாகவுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் கே. கந்தசாமி அறிவித்துள்ளார்.

இப்பயிற்சிவகுப்புக்கள் பரந்தன், கிளிநொச்சி, பூநகரி ஆகிய இடங்களில் நடைபெறும்.

தற்போது கடமை ஆற்றும் சகல பயிலுநர் ஆசிரியர்களும் இப்பயிற்சி நெறியில் பங்கு பற்றல் வேண்டும். இதற்குரிய விண்ணப்பப்படிவங்களைக், கல்வித்திணைக்களம் கிளிநொச்சியில் பெற்று மார்ச் 8ஆம்திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சிநெறிக்கு எட்டுப் போதனாசிரியர்கள் பதவிகள் வெற்றிடமாகவுள்ளன. பட்டப் பின் படிப்பு டிப்புளோமா அல்லதுபத்துவருட சேவையில் உள்ள பயிற்றப்பட்ட உதவி ஆசிரியர்கள் மட்டும் இப் பதவிக்குமார்ச் 8 ஆந்திகதிக்குமுன் விண்ணப்பிக்கலாம்.

பயிலுநர் ஆசிரியர்களின் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள், போதனா ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் யாவும் ஆ தருமராசா, கல்வி அதிகாரி, கல்வித்திணைக்களம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ் இளைஞர் துருக்கியில் மரணம்

துருக்கி எல்லை மீது பறந்த அமெரிக்க 'பி- 52' குண்டு வீச்சு விமானங்களில் இருந்து தப்புவதற்காகப் பதுங்கிய யாழ் வாலிபர் ஒருவர் வாயுத் தாக்குதலுக்கு உள்ளாகி மரணமானார்.

இவர் விமானத்தைக் கண்டு ஓடிச்சென்று வாயுத்தாங்கியொன்றுக்கு அருகில் பதுங்கியபோதே அது வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குரும்பசிட்டியைச் சேர்ந்த இராஜதுரை சுதன் என்பவரே இவ்வாறு பரிதாபமாக மரணமடைந்தவராவர். (16)

## சம்பள உயர்வு கோரி - நாளை மலையகத்தில் அடையாள வேலைநிறுத்தம்

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் நாளை புதன்கிழமை ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ளனர்.

பண்டிகை முற்பணம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும், சம்பளத்திலிருந்து 75 ரூபா அறவிடப்படுவது நிறுத்தப்படல் வேண்டும், வரவு செலவுத் திட்ட சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும், வாழ்க்கைச் செலவுப் புள்ளி ஒவ்வொன்றுக்கும் இரண்டுரூபா வீதம் வழங்கப்படல் வேண்டும் ஆகிய கோரிக்கைகளைமுன்வைத்தே இந்த அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. (33)

## கடமைநேரத்தில் சீருடை அணிய வைத்தியசாலை ஊழியர்க்குப் பணிப்பு!

வைத்தியசாலை ஊழியர்கள் கடமை நேரத்தில் கோல உடையணிந்து உத்தியோக அடையாள அட்டை தரித்திருக்க வேண்டியது மிகக் கட்டாயமாகும் எனவும் கடமை நேரத்தில் ஊழியர்கள்கடமை இடங்களிலேயே காணப்பட வேண்டும் எனவும் யாழ் பிரதேச சுகாதாரசேவைப்பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை பணித்துள்ளார்.

வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறவரும் நோயாளர்களுக்கு இடைஞ்சல்கள், அசௌகரியங்கள் ஏற்படக்கூடிய வகையில் ஊழியர்கள் நடந்து கொள்ளக் கூடாதெனவும் குறிப்பாக இராமப்புற வைத்தியசாலைகள் கடமை நேரங்களில் திறந்திருக்க வேண்டுமெனவும், உரிய ஊழியர்கள் அங்கு கடமையிலிருக்க வேண்டுமெனவும் அவர் பணித்துள்ளார். (15)

## அரசசேவை சிற்றூழியர் நியமனம் நிறுத்தம்

ஸ்ரீலங்கா அரச சேவையில் அதிகமான ஊழியர்கள் உள்ளனர் என உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட ஏனைய நிதிவழங்கும் நிறுவனங்களின் ஆய்வில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

இதன் எதிரொலியாகநாள் சம்பளம் மற்றும் சேவை அடிப்படையில் சிற்றூழியர்கள் நியமனம் செய்யப்படுவது நிறுவப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா கொழும்பில் தெரிவித்துள்ளார்.

## வர்த்தகர் சங்கம் அன்பளிப்பு

தென்மராட்சியில் உள்ள அகதிகளின் பிள்ளைகட்கும், போராளிகள் குடும்பத்தை சேர்ந்த பிள்ளைகட்கும், ஏழைப்பிள்ளைகட்குமாக மொத்தம் 500 பிள்ளைகட்கு சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கத்தினரால் கொப்பிகள், பென்சில் றேசர் என்பன தென்மராட்சி மாணவர் அமைப்பு மூலமாக இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. (ப-5)

## பொது இடங்களில் பதுங்கு குழிகள்

பொது மக்களின் பாதுகாப்புக் கருதி சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம் சாவகச்சேரி இலங்கை வங்கியிலிருந்து சங்கத்தானை இந்துக்கல்லூரி வரையிலும் 19 பதுங்குகுழிகளை வெட்டியுள்ளது. (ப-5)

## இழப்புக்களைப் பற்றி அஞ்சாதவர் சதாம்

''வளைகுடா யுத்தம் விஸ்தரிக்கப்படும்போது சதாம் எதையும் செய்யத் துணிவார்'' என்று கூறுகிறார் ஜெனரால் ட்றெயினர். இவர் ஈராக், ஈரானிய போரின் போது போர்முனையில் செய்தியாளராகக்கடமையாற்றியவர். ''ஈராக்கியர் தேசியவாதிகள். சளைக்காமற் பின்வாங்காமல் சண்டையிடுவார்கள்'' என்று மேலும் சொன்னார்.

''சதாமைப் பொறுத்தவரை அவர் இழப்புகளைப் பற்றிக் கவலைப்படாதவர். ஈரானுடனான போரில் ஒரு லட்சம் துருப்புக்களைத் தியாகம் செய்தவர். இதற்கும் அதிகமாகத் தியாகம் செய்யத் தயங்கமாட்டார். வளைகுடா யுத்தத்தைப் பொறுத்தவரை எதிரிக்கு எவ்வளவு கூடுதலான இழப்பை ஏற்படுத்த முடியுமோ அதைச் செய்வதே சதாமின் நோக்கம்'' என்றார் ஜெனரல் ட்றெயினர்.

(நேற்றைய தொடர்ச்சி)

# இந்தியா அணுக்குண்டுதயாரிக்கும் காலம் வந்துவிட்டது

அணு ஆயுத நிபுணர் ஒருவர் ''அணு ஆயுதம் தயாரிப்பதற்கான சகல இரசாயனங்களும், உபகரணங்களும், சாதனங்களும் இருப்பின் இருகிழமைகளுக்குள் அணுக்குண்டு தயாரித்து விடலாம்'' என்றார். ஆனால் அமெரிக்க உளவு ஸ்தாபனம், இந்தியா அணுக்குண்டு தயாரிப்பதற்கு இரண்டு மாதங்கள் தேவைப்படும் எனக் கூறுகிறது.

இக்கருத்துகளை ஆராயும்போது, இந்திய அரசு அணுக்குண்டு தயாரிக்கத் தீர்மானிப்பின், இருவாரங்களிலோ அல்லது இரு மாதங்களிலோ தயாரிக்க முடியும் என அறியமுடிகிறது.

பாகிஸ்தான் ஏற்கனவே அணுஆயுதங்களை உற்பத்தி செய்து குவித்துள்ளது. இதுபற்றி அமெரிக்காவிற்கு நன்கு தெரியும். அமெரிக்க உளவு நிறுவனங்களின் அறிக்கைகளின்படி, பாகிஸ்தான் அணுக்கதிர் அற்ற அணுக்குண்டின் பாகத்தை வெடிக்கவைத்துச் சோதனை செய்துள்ளது ஆனால் இந்தியாஅப்படிஒரு சோதனைசெய்ததாகச்சான்றுகள் இல்லை. கனடிய அணுசக்தி நிபுணரின் கருத்துப்படி அணு ஆயுத உற்பத்திக்குச் சோதனை அவசியம், இச்சோதனையை 1985 இல் பாகிஸ்தான் செய்தது.

அணு ஆயுத உற்பத்தியில் பாகிஸ்தான் அடைந்திருக்கும் முன்னேற்றத்தை அவதானிக்குமிடத்து, இந்தியா தயார் நிலையில் உள்ளதா எனச் சிந்திக்க வேண்டியுள்ளது பாகிஸ்தானின் அணுஆயுதச் சவாலை ஏற்கக்கூடிய நிலையில் இந்தியா தன்னைத் தயார்ப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். அணுசக்தியை அபிவிருத்திக்கு உபயோகிப்பதற்கு இந்தியா 1974 இல் ஒரு சோதனை நடத்தியது. ஆனால் ''இந்தியா அணு ஆயுதம் தயாரிக்கப் போகிறது'' என சர்வதேச அரங்கில் குரல் எழும்பியதும் இந்தியா இந்த முயற்சியில் பின்வாங்கி, சோதனைகளை அறவே நிறுத்தியது. இதன் காரணமாக அணு ஆயுத உற்பத்தி சம்பந்தமான ஆராய்ச்சி தடைப்பட்டது.

அணுஆயுதம் வைத்திருக்கும் எந்த நாடும் அதற்குத் தேவையான பல தொழில் நுட்ப சாதனங்களும், விசேட இராணுவ விமானங்களும், தரை இராணுவ வாகனங்களும் வைத்திருக்க வேண்டும். இவையாவும் இன்றுவரை இந்தியாவிடம் இருப்பதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. அமெரிக்காவின் முக்கிய குறிக்கோளும், அக்கறையும் தென் ஆசியாவில் இந்தியா அணுஆயுத வல்லரசாக உருவாகுவதைத் தடுப்பதே இதை இந்தியா நன்கு உணர வேண்டும்.

இஸ்ரேலும், தென்ஆபிரிக்காவும் அணுஆயுத உற்பத்தியில் ஈடுபட்டபோது மௌனமாக இருந்த அமெரிக்கா, தனது நேசநாடான பாகிஸ்தான் அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்யும் போது தடுக்க முற்படும், என எதிர்பார்க்க முடியாது.

பாகிஸ்தானின் அணு ஆயுத உற்பத்தி சம்பந்தமாகவும், அது அடைந்துள்ள அபிவிருத்தி பற்றியும் இந்தியா நன்கு அறிந்து இருந்தும், அது பற்றி ஒன்றுமே தெரியாதது போல் அலட்சிய மனப்பான்மையுடன் இருப்பது இந்தியாவின் பாதுகாப்பிற்கு நல்லதல்ல.

அணு ஆயுத உற்பத்திக்கு ஏற்படும் செலவு பற்றி அணு ஆயுத வல்லரசுகள் மிகைப்படுத்திக் கூறியிருக்கின்றன அதற்கான செலவுகளை வளர்முக நாடுகள் தாங்கிக் கொள்ள மாட்டா எனக் கூறின. உண்மையில் அவர்கள் கூறும் அளவிற்குச் செலவு அதிகமானது அல்ல.

உலகில் இரண்டாவது கூடிய சனத்தொகையைக் கொண்ட நாடு இந்தியா. அதற்கு அணுஆயுதம் வைத்திருக்கும் தகுதியும், உரிமையும் உண்டு. எல்லாவற்றிக்கும் மேலாகத் தன்னைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைப்பாடும் உண்டு. அணு ஆயுதம் வைத்திருக்கும் ஓர் எதிரி அணு ஆயுதத்தினால் தாக்குவதைத் தடுக்கவேண்டுமானால், இந்தியா தன்னிடமும் அணுஆயுதம் இருப்பதை வெளிப்படுத்த வேண்டும்.

''இந்தியா அணுஆயுதம் தயாரிக்க முடியுமா என்பதல்ல இப்போதுள்ள நிலை. இந்தியா அணுஆயுதம் தயாரிக்காது இருக்கமுடியுமா என்பதே இப்போது எழுந்துள்ள நிலை''.

தொகுப்பு — வி. பி

## சதாம் கொடுத்த பரிசு

சதாம் ஆணவக்காரர், அசட்டுத் துணிச்சற்காரர். இதற்கு மேலாக அவர் மிகவும் கொடூரமானவர்.

ஈராக், ஈரானுடன் போரிட்டபோது, ஈராக்கில் இருக்கும் குர்திஷ் இனத்தினர் ஈரானை ஆதரிப்பதாகக் கருதினார். அம்மக்கள் வசிக்கும் ஹலப்ஜா என்ற ஊர்மீது (1988-ல்) ரசாயன ஏவுகணைகளைச் செலுத்தினார் சதாம். உடம்பில் ஒரு சிதைவும் இன்றி மக்கள் ஆயிரக்கணக்கில் செத்துவிழுந்தனர். இந்தக் கொடூரச் செயல் உலகை உலுக்கியது. நாலாயிரம் பேருக்கு மேல் இறந்ததாகக் கூறப்பட்டது. உலகின் நாலா பக்கங்களில் இருந்தும் ஏகப்பட்ட கண்டனங்கள் கிளம்பின. சதாம் பொருட்படுத்தவில்லை. ''இவர்கள் சொந்த நாட்டிற்கே துரோகம் செய்தார்கள். துரோகத்தின் பரிசு இது'' என்றார் சதாம்.

## ஈராக்கின் கவச வாகனப் படையணி

# தரையின் கீழ்இருந்து யுத்த முனைக்குப் புறப்பட்டது

குவைத்தின் தேசிய தினமான நேற்று இரண்டாவது நாளாகவும் வளைகுடாவில் தரைப்போர் உக்கிரமடைந்திருந்தது.

வளைகுடாப்போர் குறித்த செய்திகளை வெளியிட அமெரிக்க நேச அணி தரம்பில் மறுப்பு தெரிவிக்கப்படுகிறது. எனினும் இரண்டாம் நாள் போரில் குவைத் நகரை அண்மித்த அமெரிக்க நேச அணிகள் குவைத் நகரின் சில மைல் தூரத்தில் நிலைகொண்டுள்ளதாக பென்டகன் தெரிவித்தது. உண்மையான பிரதான யுத்த முன்னணி எப்பகுதி என்பதை ஈராக்கியர் அறிந்து கொள்ளாதபடி அமெரிக்கப் படைகள் பரவலாக எல்லைப் பகுதி எங்கும் தாக்குதல் நடாத்தி வருகின்றனராம்.

இதனிடையே இரண்டாம் நாள் போரில் தாம் பதினாலாயிரம் ஈராக்கியரை கைது செய்துள்ளதாக அமெரிக்க தரப்பில் கூறப்பட்டது. எனினும் இது உண்மைதான் என நிரூபிக்கும்படி ஈராக் சவால் விட்டுள்ளது.

குவைத்தின் கரையோரப் பகுதிகளை தாம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து விட்டதாக அமெரிக்க கடற்படை அறிவித்த சில மணி நேரங்களில் ஈராக் அமெரிக்க பிரிட்டிஷ் கடற்படை கப்பல்கள் மீது 'சில்க்வேர்ம்' ஏவுகணைகள் இரண்டை ஏவியுள்ளது. எனினும் கப்பல்களுக்கு சேதமில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

ஈராக்கின் திறமைமிக்க படை எனக்கருதப்படும் குடியரசுக் காவல்படை எனும் கவசவாகன அணி தமது தரையடி அரண்களில் இருந்து புறப்பட்டுள்ளது, நேச அணிகளை எதிர்கொள்வதற்காக இப்படையணி ஈராக்கின் தென்பகுதி நோக்கி பெருமெடுப்பில் நகர ஆரம்பித்துள்ளதாக குண்டுவீச்சில் ஈடுபட்ட அமெரிக்க விமானப் படை விமானிகள் அறிவித்துள்ளனர்.

இப்படையணி புறப்பட்டு விட்டதால் யுத்தம் இனிமேல் மிக பயங்கரமானதொன்றாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இப்படையணிகளில் உள்ள கவசவாகனங்கள் டாங்கிகளை அழிக்க அமெரிக்க விமானப்படையின் டாங்கி அழிப்பு 'அப்பசே' ஹெலிகப்டர்களையும் 'தண்டர் போல்ட்' விமானங்களையும் உடனடியாக பணியில் இறங்குமாறு அமெரிக்க விமானப்படை கேட்டுள்ளது.

குவைத்தினுள் ஊடுருவிய அமெரிக்க நேச அணிப் படையை முறியடித்து விரட்டியடித்து விட்டதாக ஈராக்கின் மூன்றாம் படைப் பிரிவு அறிவித்திருக்கிறது. நேச அணியின் வாகனங்கள் அநாதரவாக குவைத்தில் காணப்படுவதாகவும் ஈராக் தெரிவித்தது.

தெற்கு நோக்கி நகர்ந்து வந்து கொண்டிருக்கும் ஈராக்கின் கவசவாகனப் படைக்குத் துணையாக ஈராக்கின் போர் விமானங்கள் வானில் சுற்றித் திரிவதாக கூறப்படுகிறது. போரில் முதற்தடவையாக ஈராக்கிய விமானப்படை செயற்படத் தொடங்கியுள்ளது.

## நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்தில் நிவாரண விநியோகம் சீராக இல்லை

நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்தில் நிவாரணப் பொருள்களுக்கே அடிக்கடி தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது.

சகலருக்குமான 2 ஆம் வார உணவு விநியோகத்தின் போது அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறி குறிப்பிட்ட தொகைக்கும் குறைவாகவே வழங்கப்பட்டுள்ளது.

4 ஆம் வார விநியோகத்தின் போதும் பருப்பு இல்லாமையால் 315 ரூபா பெறுமதிக்குப் பதிலாக 266 ரூபா 50 சதத்துக்கு மட்டுமே பொருள்கள் வழங்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் தெரிவிக்கின்றனர்.

இரண்டாம் வார குறைவு நிவர்த்தி செய்யப்பட்ட போதும் நான்காம் வார பருப்பு இன்னும் வழங்கப்படாமல் அதற்கு அடுத்த விநியோகம் இங்கு நடைபெறுகின்றது குறிப்பிடத்தக்கது. (66)

## உற்பத்திக் குழு இணைப்புக் கூட்டம்

உடுவில் சமநலசேவை பிரதேச கிராமிய உற்பத்திக் குழுக்களின் இணைப்புக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறும் என தமிழீழ ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. (71)

## கிணற்றில் இருந்து பெண்ணின் சடலம்

கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் உள்ள பாண் கிணற்றுக்குள் ஒரு பெண்ணின் சடலம் அழுகிய நிலையில் மீட்கப்பட்டது.

வட்டுக்கோட்டை கிழக்கு சங்கரத்தையைச் சேர்ந்த மா. தங்கமணி (56) என அடையாள அட்டை மூலம் தெரியவந்தது.

அடையாள அட்டையும் 450 ரூபா பணமும் ஒரு தங்கச் சங்கிலியும் சட்டைக்குள் இருக்கக் காணப்பட்டன. 53

## யாழ்ப்பாண...

நிகழ்ந்துள்ளது.

இச்சடலங்களை தொண்டர் நிறுவனம் ஒன்றின் பிரதிநிதிகள் நேரில் கண்டதாகவும் அதனையடுத்தே கிணற்றில் போட்டு மூடப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (ப. 11, 74)

## இந்தியத்...

வண்டிகளையும் கொடுத்துள்ளோம். இலங்கையின் தேவைகளுக்கு ஏற்ப நாம் உதவி செய்யக்காத்திருக்கிறோம் எனவும் அவர் சொன்னார்.

## இராணுவ...

உயர் ஸ்தானிகராலயம் பல தடவைகள் கோரியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதேவேளை இந்த இராணுவ முகாம் உயரதிகாரிகள் அடிக்கடி இடம் மாறுவதும் குறிப்பிடத்தக்கது. (ப-11)

## மட்டக்களப்பு...

கடந்த ஞாயிறன்று பிற்பகல் 5.30 மணியளவில் வெல்லாவெளி, பாலையடி வெட்டை, மண்டூர், 13-ம் 14-ம் கொலனி ஆகிய முகாம்களில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் தெடியவெட்டை, கல்வெட்டை, பாலையடி வெட்டை, கலாச்சேனை, மேற்குச்சேனை, அலியாவட்டைப் பகுதிகளைச் சுற்றிவளைத்து 150 இளைஞர்கள் உட்பட 400 பேரைக் கைது செய்து முகாமிற்குக் கொண்டு சென்றுள்ளனர். (71)

## செத்தல் மிளகாய் விலை வீழ்ச்சி

குடா நாட்டுக்கு செத்தல் மிளகாய் பெருமளவு வெளியிடங்களில் இருந்து வருவதால் நேற்று 200 ரூபாவாக விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. விலை மேலும் குறையும் என வர்த்தக வட்டாரங்கள் கூறின.

இதேபோல மரக்கறிகளின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது. 48

## பாணந்துறை...

தைக் கொண்டு வந்தபோது இளைஞர் ஒருவர் கத்தியால் குத்தி இப்பணத்தை கொள்ளையடித்துக் கொண்டு சயிக்கிளில் தப்பியோடிவிட்டார். ஊழியர் ஸ்தலத்தில் மரணமானார். (74)

## பரீட்சைகள்...

ஆண்டு மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில் நுட்ப தராதரப்பரீட்சையும் நடைபெறவுள்ளது.

மேற்படி சகல பரீட்சைகளும் பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும் எனவும் பணிப்பாளர் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப 11)

## ரியூஷன் கல்வியை நீக்க பாடசாலை முடிந்ததும் வகுப்புக்கள்

பாடசாலைகளின் குறைகளை நீக்க அடுத்த மாதம் முதல் கல்விச்சபை மசோதா செயற்படுத்தப்படும். இதன்படி பாடசாலை அபிவிருத்தி நிதியம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

இவ்வாறு கல்வி உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி கூறினார்.

ரியூஷன் கல்வி முறையை நீக்கப் போவதாகவும், அதற்காக பாடசாலை முடிந்ததும் மாலைவகுப்புக்கள் நடாத்த ஏற்பாடுகள் செய்ய அரசு திட்டமிட்டுள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## மன்னார்த் தீவிலும் மருந்து பாலுணவுப் பொருள் தட்டுப்பாடு

மன்னார்த்தீவில் மருந்து வகைகள், பாலுணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேபோல இங்குள்ள மருத்துவ உத்தியோகத்தர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது.

மன்னார் மாவட்ட வைத்திய அதிகாரி வெற்றிடம் நிரப்பப்படாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 48

## இத்தாலிய பிரஜைக்கு 'எயிட்ஸ்' பொலிஸார் விசாரணை

சந்தேகத்துக்கு இடமான முறையில் நீர்கொழும்பு கடற்கரையில் உலாவிய இத்தாலியப் பிரஜை ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர் முல்லேரிய ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டு 'எயிட்ஸ்' நோய்க்கான இரத்தப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

இவருடன் கடற்கரையில் காணப்பட்ட 17 சிறுவர்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

## சம்பள உயர்வு கோரி தனியார் ஊழியர் மறியல்

சம்பள உயர்வு கோரி கொழும்பில் உள்ள சில தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் ஒருநாள் மறியல் செய்தனர்.

சுலோக அட்டைகள் தாங்கியவண்ணம் இவர்கள் தமது நிறுவனங்களுக்கு முன்பாக காணப்பட்டனர்.

சில தொழிற்சங்கங்கள் இதனை ஏற்பாடு செய்தன. (33)

## போதைவஸ்து வழக்கில் தமிழ் இளைஞருக்குப் பிணை

ஹிரோயின் போதைவஸ்து வைத்திருந்த எம். பத்மசிறி என்ற மட்டக்களப்பு இளைஞரை கொழும்பு மேல் நீதிபதி ரி. சுந்தரலிங்கம் 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

1990 இல் இவர் ஒன்றரைக் கிலோ ஹிரோயின் வைத்திருந்தபோது பொலிஸாரால் பிடிக்கப்பட்டார். (48)

## 23 டாக்டர்கள் ஆஸ்பத்திரிக்கு நியமனம்

யாழ் போதனா வைத்தியசாலைக்கு 23 டாக்டர்கள் புதிதாக நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்கள் யாழ் பல்கலைக் கழகத்தில் படித்து பட்டம் பெற்றவர்கள் எனத் தெரிய வருகிறது.

இதனால் யாழ் போதனா வைத்தியசாலையில் டாக்டர்கள் தட்டுப்பாடு ஓரளவு நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (74)

## திடீர்ச் சோதனையின் போது நிறுவையில் மோசடி கண்டுபிடிப்பு

யாழ் குடாநாட்டில் உள்ள சில கூட்டுறவுச் சங்கங்களில் நிவாரணப் பொருள் நிறுவையில் மோசடி இருப்பதை விலைக் கட்டுப்பாட்டு பரிசோதகர்களும், நிறுவை அளவைப் பிரிவினரும் கண்டுபிடித்தனர்.

இதேபோல கூட்டுறவுச் சங்க பேக்கரி ஒன்றினால் தயாரிக்கப்பட்ட பாணும் நிறை, தரம் குறைந்து இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

தனியார் வர்த்தகர்கள் சிலரும் இவ்வாறு அகப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் தாம் வாங்கும் பொருள்கள் சரியான நிறை, தரம் உள்ளனவா என்று உறுதிப்படுத்துமாறு உணவுக்கட்டுப்பாட்டதிகாரி எஸ். ஐ. நித்தியராஜ் முரசொலிக்குத் தெரிவித்தார். (66)

## அவுஸ்திரேலிய புலமைப் பரிசில்

அவுஸ்திரேலியா வழங்கும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டத்தில் பொறியியல் துறைப் புலமைப் பரிசிலை பருத்தித்துறை மெதடிஸ்த் பெண்கள் கல்லூரி மாணவி செல்வி பவானி கணேசலிங்கம் பெற்றுள்ளார். இவர் புற்றளையைச் சேர்ந்தவர் (15)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி, "லக்ஷ்மிபில்டிங்ஸ்" உள்ள அச்சகத்தில் 26-02-1991 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.